O.S.No. 301/2020 – Date : 24.10.2025

DW3 – அண்ணாதுரை

மனுவின் பேரில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது நிரூபண வாக்குமூலத்தில் 09.04.2018ம் தேதி எனது தகப்பனாரான வாதி ஆறுமுகத்திடம் ரூ.9,00,000/– கடனாக பெற்று அதற்கு 18 சதவிகித வட்டியுடன் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு தாவா ஒப்பந்தம் எழுதப்பட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரி. 1ம் பிரதிவாதி சின்னராமசாமியை எனக்கு தெரியும் என்றால் சரி. அவருக்கு ராமகவுண்டர் ஒரு மகனும் வசந்தா என்ற மகளும் உள்ளார்கள் என்றால் சரி. எனது அப்பா ஆறுமுகம் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதற்கு பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுத்த விவரம் தெரியுமா என்றால் என் அப்பா சொன்னார். அந்த பதில் அறிவிப்பில் வசந்தா சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் ஓஎஸ்.116/2020 தாக்கல் செய்த விவரத்தை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரி. மேற்படி வழக்கு எதற்காக போடப்பட்டது என்ற விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2015ம் ஆண்டு எனது தகப்பனார் 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் போட்ட ஒப்பந்தத்தை 09.04.2018ம் தேதியில் ரத்து செய்து அதே தேதியில் தாவா கிரய ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் சரி.

2015ல் போட்ட ஒப்பந்தப்படி ரூ.5,50,000/– அட்வான்ஸ் திரும்ப கொடுத்துவிட்டு 9.4.2018ம் தேதி ரூ.9,00,000/– அன்வான்ஸ் தொகை கொடுத்ததாக கண்டுள்ளது என்றால் சரி. ரத்து பத்திரத்திலும் கிரய ஒப்பந்த பத்திரத்திலும் நான்தான் சாட்சி என்றால் சரி.

2015ல் போடப்பட்ட ஒப்பந்தத்தை 2018ல் ரூ.5,50,000/– பெற்றுக்கொண்டு ரத்து செய்துவிட்டு அதே தேதியில் ரூ.9,00,000/– அட்வான்சாக பிரதிவாதிகளுக்கு கொடுத்த விவரத்தை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனது தகப்பனார் எதற்காக வழக்கு போட்டுள்ளார் என்ற விவரம் தெரியும் என்றால் தெரியும். முதல் பரிகாரமாக ஒப்பந்தப்படி கிரயம் எழுதி தரவேண்டும் என்று கேட்டுள்ளார் என்றால் சரி. மாற்று பரிகாரமாக முன்பணத்தை திருப்பி கேட்டுள்ளார் என்றால் சரி. ஒப்பந்தப்படி 2 பரிகாரங்களை கேட்க வாதிக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

வசந்தாவை ஒரு தரப்பினராக சேர்த்து ஒப்பந்தம் எழுதப்படவில்லை என்றால் சரி. பிரதிவாதிகள் என்ன பதிலுரை தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியும். ஒப்பந்தம் கிரயத்திற்காக போடப்பட்ட ஒப்பந்தம் இல்லை என்றும் அது கடனுக்காக எழுதப்பட்ட ஒப்பந்தம் என்றும் எனவே வாதி கோரியபடி பரிகாரம் கேட்க வாதிக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

09.04.2018ம் தேதி போடப்பட்ட ஒப்பந்தப்படி ரூ.9,00,000/- பிரதிவாதிகளுக்கு கொடுக்கவில்லை என்றும் ஏற்கனவே 2015ம் ஆண்டு ஏற்பட்ட ஒப்பந்தத்தை 9.4.2018ல் ரத்து செய்துவிட்டு அதை புதுப்பித்து புதியதாக தாவா ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பணத்தை பெற்றுக்கொண்டுதான் ஒப்பந்தத்தில் கையெழுத்து செய்தார்கள். நான் சொல்வது தவறு என்றும் அவ்வாறு பணம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.